**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**
**O.S.No.70 of 2021**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | **PW5** |
| **Name of the Witness** | : | வேலுசாமி |
| **Father's Name** | : | ஆறுமுகம் |
| **Age** | : | 43 |
| **Occupation** | : | |
| **Address** | : | 80, மாரியம்மன்கோயில் தெரு, கிழக்கு ராமாபுரம், கடலூர் தாலுக்கா |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 18th day of December, 2023.

குறுக்கு விசாரணை :-

1. தனகோடி எனது பெரியப்பா மகள், அந்த வகையில் எனக்கு அக்கா உறவுமுறை. காலை எத்தனை மணிக்கு எழுத்துக்காரரிடம் சென்றோம் என்றால், காலையில் செல்லவில்லை, பகல் 12.00 மணிக்கு மேல் சென்றோம், எழுதி முடிக்க மாலை 04.00 மணி ஆகிவிட்டது. பத்திரங்கள் அளித்ததாக நான் கூறியுள்ள சங்கதி தொடர்பாக, அவ்வாறு பத்திரங்களை அளிக்கும்போது ஏதேனும் குறிப்புகளை தனகோடி அம்மாள் அளித்தாரா என்றால், குறிப்புகள் எதுவும் தனகோடி அம்மாள் அளிக்கவில்லை, பத்திரங்களை மட்டும் தான் தனகோடி அம்மாள் அளித்தார். மாதிரி உயில் என்னால் என்னவென்று தெரியுமா என்றால், கேள்வி சரியாக புரியவில்லை. மாதிரி உயில் என்றால், என்னவென்று எனக்கு கூறினால் தான் புரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் மாதிரி உயில் என்ற வார்த்தைகளை குறிப்பிட்டுள்ளேனே என்றால், அதனை நான் படித்து பார்க்கவில்லை. பத்திரங்களை வாங்கியவுடன் எழுத்துக்காரர் என்ன செய்தார் என்றால், யாருக்கு உயில் எழுதவேண்டும் என கேட்டார், தம்பிக்கு என்று கூறியவுடன் படித்து பார்த்துவிட்டு, உயிலை அச்சு செய்து கொண்டு வந்தார். என்ன காரணத்திற்காக தன் தம்பி

பெயரில் உயில் எழுதி வைப்பதாக காரணம் ஏதேனும் கூறப்பட்டதா என்றால், காரணம் எதுவும் சொல்லவில்லை. தனகோடி அம்மாள், அவரது சித்தப்பா ஆறுமுகம் இறந்த துக்க வீட்டிற்கு வந்தவர், அன்றைய தினமே அந்த வீட்டிலேயே இறந்துவிட்டார் என்றால் ஆமாம். தனகோடி அம்மாள் இறந்த தேதி தெரியாது, வருஷம் மற்றும் மாதம் தெரியுமா என்றால் வருஷம் தெரியும், மாதம் நினைவில்லை. எந்த வருஷம் தனகோடி அம்மாள் இறந்தார் என்றால் 2021 ஆம் வருடம் இறந்தார். நான் சாட்சியமளிக்கும் உயில் பத்திரத்தில் தனகோடி அம்மாள், எந்த சூழ்நிலையிலும் கைரேகை வைக்கவேயில்லை என்றால் சரியல்ல. கைரேகை தான் வைத்தார்கள். இவ்வழக்கிற்காக நானும் ராமசாமியும் மற்றவர்களும் இணைந்து, பொய்யான ஒரு உயிலை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான்கு மணிக்கு எழுதிமுடிக்கப்பட்டதாக சொல்லப்படும் உயில் பத்திரத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்றால், மறுநாள் பதிவு செய்துகொள்வதாக சொல்லி பத்திரத்தை பையில் வைத்துக்கொண்டு, தனகோடி அம்மாள் புறப்பட்டுவிட்டார். பத்திரம் எழுதி முடிக்கப்பட்டவுடன் அதனை பதிவு செய்ய அன்றைய தினம் நேரம் இருந்ததா என்றால் நேரம் இருந்தது.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*